# நடப்பு நிகழ்வுகள்- செப்டம்பர் 02 - 2017

- சர்வதேச கழுகு விழிப்புணர்வு நாள் (International Vulture Awarness Day) செப்டம்பர் - 02. சுற்றுச்சூழனின் "துப்புறவு பணியாள்" என அழைக்கப்படும் கழுகுகள் இயற்கை மாற்றத்தால் அழிவின் விழிம்பிள் உள்ளன. இவற்றை காப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கொண்டாடப்படுகிறது.

- புதிய இந்திய தேர்தல் ஆணையராக "சுனில் அரோரா" நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய தேர்தல் ஆணையத்தில் தற்போது மூன்று தேர்தல் ஆணையர்கள் செயல்படுகின்றனர். ஆச்சல் குமார் ஜோதி – தலைமை தேர்தல் ஆணையர், ஓம் பிரகாஷ் ராவத் – தேர்தல் ஆணையர், சுனில் அரோரா – தேர்தல் ஆணையர்

- இந்தியாவின் முதல் பாரம்பரிய நகரம் (India's first World Heritage City) எனும் பெருமையை குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரம் பெற்றுள்ளது. இதற்கான சான்றிதழை யுனெஸ்கோ (UNESCO) அமைப்பின் இயக்குநர் ஜெனரல் "ஐரினா போகோவா" (Irina Bokova) வழங்கினார். இந்த அகமதாபாத் நகரமானது 1606 ஆம் ஆண்டில் சுல்தான் அஹமது ஷா என்பவரால் சமர்பதி ஆற்றோரத்தில் நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- கோவா மாநில அரசு இணையவழி மூலம் பொதுமக்கள் குறைதீர்ப்பு முறைமையை செப்-1 அன்று கோவாவின் முதல்வர் மனோகர் பாரிக்கார் தொடங்கிவைத்தார். குடிமக்கள் எந்த ஒரு அரசாங்க துறையிலும் உள்ள குறைகளை பதிவுசெய்வதற்கான ஒரு ஒற்றைசாளார முறை இணைய வலைத்தளமாகும்.

- கோவையில் நடைபெற்ற பி.எஸ்.ஜி. கோப்பைக்கான அகில இந்திய அளவிலான ஆடவர் கூடைப்பந்து போட்டியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (ஐஓபி) அணி சாம்பியன் பட்டம் சென்றது.

OXFORD IAS ACADEMY

- உலகின் மிகப்பெரிய மணற்கோட்டை ஜெர்மனியல் உள்ள டியூஸ்பர்க்கில் கட்டப்பட்டது. இதன் உயரம் 54.72 அடி. இது கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. இந்த மணற்கோட்டை ஏதென்ஸின் அக்ரோபோலிஸ், திருக்குடும்ப பிரிகாரப் பேராலயம் மற்றும் பைசா கோபுரம் போன்றவற்றின் மாதிரிகலால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

- இலங்கை மற்றும் இந்திய கடலோரக் காவல் படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை அதிகரிக்கும் வகையில் “வருணா” என்ற ரோந்து கப்பலை இந்தியக் கடலோர காவல்படை இயக்குநர் ராஜேந்திர சிங், இலங்கையின் கடலோர காவல்படை பொது இயக்குநர் சம்பத் விமலதுங்கேவிடம் முறைப்படி ஒப்படைத்தார். வருண பகவானின் பெயரைக்கொண்ட அந்தக் கப்பல் கடந்த 30 ஆண்டுகளாக இந்திய கடலோர காவல் படை அதிகாரிகளுக்கு பயிற்சி கூடமாக விளங்கியது. இந்த கப்பலுக்கு இலங்கையின் எஎஸ்சிஜி-60 என்ற வரிசை எண ஒதுக்கப்பட்டுள்ளது.

- வளர்ந்த நாடுகள் விவசாயிகளுக்கு அளிக்கும் மானியத்தைக் குறைக்க வேண்டும் என உவக வர்த்தக அமைப்பில் (WTO) இந்தியாவும், சீனாவும் வலியுறுத்தவுள்ளன. அமரிக்கா, ஐரோப்பிய யூனியன் நாடுகள், கனடா ஆகிய நாடுகள் தொடர்ந்து தங்கள் நாட்டு விவசாயிகளுக்கு 50 முதல் 100 சதவீதம் வரை மானியம் அளித்து வருகிறது. வளரும் நாடுகள் தங்கள் விவசாயிகளுக்கு 10 சதவீதத்திற்கு மேல் மாநியம் அளிக்கக்கூடாது என்று வலியுறுத்துவதை ஏற்க முடியாது என்று இந்தியவும் சினாவும் கேள்வி எழுப்பியுள்ளது.

- நிதி அயோக் அமைப்பின் முதல் துணைத்தலைவராக செயல்பட்ட அரவிந்த் பனகாரியா பதவி விலகியதைத் தொடர்ந்து புதிய துணைத் தலைவராக பொருளாதார நிபுணர் “இராஜிவ் குமார்” நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- இந்திய ஹாக்கி அணியின் தலைமைப் பயிற்சியாளர் பதவியிலிருந்து ரோலண்ட் ஒல்ட்மன்ஸ் நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

OXFORD IAS ACADEMY